මැතිවරණ කොමිෂන් සභාව
58
09 JAN 2026
නීති අංශය
රාජගිරිය

# புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியின் அமைப்பு விதிகள்

## 2010 யூன் 25, 26ம் திகதிகளில் நடைபெற்ற 5வது அனைத்திலங்கை மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது

புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியின் 5வது அனைத்திலங்கை மாநாட்டினால் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டு வெளியிடப்பட்டது.

கட்டாயமாக கட்சி உறுப்பினர்களுக்கு மட்டும்

09 JAN 2026

# புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியின் அமைப்பு விதிகள்

## 2010 யூன் 25, 26ம் திகதிகளில் நடைபெற்ற 5வது அனைத்திலங்கை மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது

புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியின் 5வது அனைத்திலங்கை மாநாட்டினால் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டு வெளியிடப்பட்டது.

கட்டாயமாக கட்சி உறுப்பினர்களுக்கு மட்டும்

# புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சி

**புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியின் 2010 யூன் 25, 26ம் திகதிகளில் நடைபெற்ற 5வது அனைத்திலங்கை மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட கட்சியின் அமைப்பு விதிகள்**

**உறுப்பினர்களுக்கு மட்டும்**

**01. பெயர்**

அ) இக்கட்சியின் பெயர் புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சி ஆகும். சுருக்கமாக பு.ஜ. மா.லெ.க.என்று பாவிக்கப்படும்.

ஆ) கட்சியின் சின்னமானது வெள்ளை நிற ஐந்து முனை நட்சத்திரத்தினுள் குறுக்குவாட்டாக அமைந்த சிவப்பு நிற அரிவாளையும் சம்மட்டியையும் கொண்டது.

இ) கட்சியின் கொடி செவ்வகமானதும் சிவந்த பின்னணியில் மேற்கூறிய சின்னத்தைக் கொண்டதுமாகும்.

ஈ) கட்சியின் பதிவு செய்யப்பட்ட பணிமனை 59/3 வைத்தியா வீதி, தெகிவளை எனுமிடத்தில் அல்லது கட்சியின் மத்திய குழு முடிவு செய்தவாறான பொருத்தமான ஒரு இடத்தில் அமைந்திருக்கும்.

**02. கருத்தியல்**

புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சி இலங்கையில் எல்லா மக்களுக்குமான இலங்கைத் தொழிலாளி வர்க்கத்தின் கட்சியாகும். அது மாக்சிசம்-லெனினிசம்-மாஓ சேதுங் சிந்தனையையும் அதன் பட்டறிவையும் விருத்தியையும் பாட்டாளி வர்க்க சர்வ தேசியத்தையும் கட்சியின் கருத்தியலாகப் பற்றி நிற்கிறது.

கட்சி தனது பட்டறிவின் அடிப்படையில் தனது கொள்கைகளையும் மூலோபாயகங்களையும் செய்நிரல்களையும் தந்திரோபாயங்களையும் மாக்சிசம்

லெனினிசம் மாஓ சேதுங் சிந்தனையினதும் அதன் பட்டறிவினதும் விருத்தியினதும் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தினதும் வழிகாட்டலின் கீழ் அவற்றை இலங்கையின் குறிப்பான நிலமைகளுடன் ஒருங்கிணைத்து முன்னெடுக்கிறது.

03. நோக்கங்கள்

அ) ஏகாதிபத்தியம், நவ கொலனித்துவம், மேலாதிக்கம், விஸ்தரிப்புவாதம், நிலப்பிரபுத்துவம், முதலாளியம் ஆகியவற்றையும் எல்லா வகையான பேரினவாதத்தையும் குறுந்தேசிய வாதத்தையும் எப்போதும் எதிர்த்து நிற்பது.

ஆ) தேசிய ஜனநாயகக் கட்டத்தை முழுமைப்படுத்தவும், பொருத்தமான அரசு, அரசாங்க வடிவங்களைக் கொண்டு வர்க்கம், தேசியம், இனம், சாதி, குல, பால், சமயம், பிரதேசம், என்பவற்றின் அடிப்படையிலான சகல பாகுபாடுகளையும் ஒடுக்குமுறைகளையும் நீக்குவதற்காக புதிய ஜனநாயக கால கட்டத்தைப் பூர்த்தி செய்யவும் இலங்கையின் அனைத்து உழைக்கும் மக்களுக்குமான, விளைபயனுடைய தொழிலாளி வர்க்கக் கட்சி அமைப்பொன்றை உருவாக்குவது.

இ) பொருத்தமான அரசு, அரசாங்க வடிவங்களையுடைய ஒரு சோசலிச அமைப்பை நிறுவி உறுதிப்படுத்துவது

ஈ) இறுதியில் ஒரு கம்யூனிஸ சமூகத்தை ஏற்படுத்துவது

உ) ஜனநாயகமுறை வழிகளோடும் மக்கள் இயக்க செயற்பாடுகளோடும் மக்கள் தங்களுடைய நெறிமுறையான உரிமைகளை வென்றெடுப்பதற்கான ஜனநாயகப் போராட்டங்களை முன்னெடுப்பது.

ஊ) கட்சியினுடைய பரந்துபட்ட நோக்கங்களைப் பரப்புரை செய்து மேம்படுத்தும் நோக்கில் வேட்பாளர் நியமனம் பற்றிய விதிகளை முடிவு செய்யும் உரிமையை கட்சி தன்னிடம் கொண்டிருக்குமாறு, பொருத்தமான முறையில் தனியாகவோ பிற அரசியல் கட்சியுடன் கூட்டமைத்த கட்சிகளுடன் ஐக்கிய முன்னனியாகவோ ஜனாதிபதி, பாராளுமன்ற, மாகாண சபை, உள்ளுராட்சி இன்னும் பல தேர்தல்களில் போட்டியிடுவது.

ஏ) கட்சியினுடைய நோக்கங்களை அடைவதற்காக வாலிப அணிகள், மகளிர் அமைப்புகள், பண்பாண்டு அமைப்புகள், தொழிற்சங்கங்கள், கழகங்கள் போன்ற உறவு அமைப்புகளை அமைப்பதும் கூட்டணிகளையோ முன்னணிகளையோ அமைப்பது.

ஏ) பிற நாடுகளின் கம்யு'னிஸ்ட், ஜனநாயக, முற்போக்கு, இடதுசாரி விடுதலைக் கட்சிகளுடனும் அமைப்புகளுடனும் சகோதர உறவுகளை வலுப்படுத்தி பாட்டாளி வர்க்க சர்வதேசியத்திற்கும் ஏகாதிபத்திய எதிர்ப்பிற்கும் தன்னை செயலூக்கத்துடன் ஈடுபடுத்துவது.

## 04. உறுப்புரிமை

அ) கட்சியின் உறுப்பினர் ஒருவர் 18 வயதுக்கு மேற்பட்டவரும் இலங்கையில் நிரந்தரமாக வதிகின்றவருமான எவரும் கட்சியின் உறுப்புரிமைக்கு தகுதியயுடையவர் ஆவார்.

கட்சியின் உறுப்பினர் ஒருவர்

I. கட்சியின் செய்நிரல், கொள்கைகள், வேலைமுறை, யாப்பு ஆகியவற்றை ஏற்க வேண்டும்.

II. தனது சந்தாவை (உறுப்புரிமை கட்டணம்) ஒழுங்காகவும் நேரத்துடனும் செலுத்த வேண்டும்.

III. கட்சி நிறுவனமொன்றின் உறுப்பினராக இருந்து அதற்காக பணியாற்ற வேண்டும்.

IV. கட்சியின் முன்கூட்டிய அனுமதியின்றி வேறெந்த அரசியல் நிறுவனத்தினதோ கட்சியின் உறுப்பினராக இருத்தல் ஆகாது.

V. கட்சியின் விதிகட்கும் முடிவுகட்கும் உடன்பட்டு அவற்றுக்கமைய நடக்க வேண்டும்.

ஆ) எல்லா வகையான கட்சி உறுப்புரிமைகளும் வருடாந்த புதுப்பித்தலுக்கு உட்பட்டவை.

## 05. உறுப்பினராக இணைதல்

அ) கட்சியில் உறுப்பினராக இணைய விரும்பும் எவரும் விதிக்கப்பட்ட படிவத்தில் தனக்கு அருகாமையில் உள்ள கட்சிக் கிளையில் அல்லது உரிய அமைப்பில் விண்ணப்பிக்க வேண்டும். அவ்விண்ணப்பம் குறைந்தது

கட்சியின் இரண்டு உறுப்பினர்களால் பரிந்துரைக்கப்பட வேண்டும்.

ஆ) விண்ணப்பத்தைப் பெற்றுக்கொள்ளும் கட்சியின் கிளையிலோ அல்லது அமைப்பிலோ விண்ணப்பதாரியின் தகுதியை கவனமாகப் பரிசீலித்து உறுப்பினர்களின் முழுமையான நிறைவெண்ணிக்கையினரைக் கொண்ட ஒரு கூட்டத்தில் ஒரு வாக்கெடுப்பின் மூலம் விண்ணப்பத்தைப் பற்றி முடிவெடுத்து அம்முடிவை மாவட்ட குழுவின் அல்லது மாவட்ட/ மாகாண/ பிரதேசக் குழுவின் மூலம் அல்லது பொருத்தமான குழுவின் மூலம் கட்சியின் மத்திய குழுவிற்கு தெரியப்படுத்த வேண்டும்.

## 06. தகுதிகாண் உறுப்பினர்

அ) கட்சிக்குள் தகுதிகாண் உறுப்பினராக ஏற்கப்பட்ட ஒவ்வொருவரும் ஆறு மாதங்களுக்குக் குறையாததும் பன்னிரண்டு மாதங்களுக்குக் கூடாததுமான காலத்திற்குள் கட்சியினது உறுப்பினராகுவதற்கான தனது தகைமையை நிருபித்தல் வேண்டும் வேண்டும்.

ஆ) தகுதிகாண் காலத்தில் உள்ள உறுப்பினர் ஒருவர்:

I. கட்சியின் யாப்புடன் தன்னைப் பழக்கப்படுத்திக் கொள்ளவேண்டும்.

II. தனது பணிகளை தான் சார்ந்த கிளையின் வழிகாட்டலுக்கும் மேற்பார்வைக்கும் உட்படுத்திக் கொள்ளவேண்டும்.

III. தீர்மானங்கள் மீதும் தேர்தல்களிலும் வாக்களிப்பதையும் கட்சிப் பதவிகட்குத் தேர்தலில் போட்டியிடுவதையும் தவிர்ந்த கட்சியின் முழு உறுப்பினருக்குரிய அனைத்து உரிமைகளையும் சிறப்புரிமைப் பேறுகளையும் அனுபவிப்பவிக்க உரித்துடையவராவார்.

இ) தகுதிகாண் நிலையிலுள்ள உறுப்பினரொருவர் தகுதிகாண் காலத்தை நிறைவு செய்ததன் மேல் சம்பந்தப்பட்ட கட்சிக் கிளை அல்லது உரிய நிறுவனம், அத்தகுதிகாண் நிலையிலுள்ள உறுப்பினர் கட்சி உறுப்பினராக இணைக்கப்படலாமா அன்றி தகுதிகாண் காலம் மேலும் ஆறு மாதங்கள் நீடிக்கப்பட வேண்டுமா

என்று முடிவு செய்யவேண்டும்.

ஈ) எந்தவொரு தகுதிகாண் நிலையிலுள்ள உறுப்பினரொருவருக்கும் கட்சியின் உறுப்புரிமை வழங்குவதற்கான கிளையின் முடிவு மத்தியக் குழுவுக்கு நேரடியாகவோ அல்லது மாவட்டக் குழுவின் அல்லது மாவட்டக் குழுவினதும் மாகாண/ பிரதேசக் குழவின் அல்லது பொருத்தமான குழுவின் மூலம் உரியவாறு தெரிவிக்கப்பட்டு மத்தியக் குழுவால் ஏற்கப்பட்டதன் மேல் அவர் முறையாகக் கட்சி உறுப்பினராகப் பதியப்பட்டு அவ் உறுப்பினருக்கு கட்சி உறுப்புரிமை அட்டை வழங்கப்படல் வேண்டும்.

## 07. உறுப்புரிமை இடமாற்றம்

அ) உறுப்பினர் ஒருவர் தான் சார்ந்த கிளையின் முற்கூட்டிய ஏற்புடைமையைப் பெறாது தனது கட்சியின் உறுப்புரிமையை மற்றொரு கிளைக்கு மாற்றலாகாது.

ஆ) எந்தவொரு கிளையும் இன்னொரு கிளையைச் சேர்ந்த உறுப்பினரொருவரை அவ்வுறுப்பினர் சார்ந்துள்ளக் கிளையின் இணக்கத்தைத் தெரிவிக்கும் ஒரு ஆவணமின்றி இணைத்துக் கொள்ளலாகாது.

இ) அனைத்து உறுப்புரிமை இடமாற்றங்களும் உறுப்புரிமை அட்டையில் பதியப்பட்டு சம்பந்தப்பட்ட கிளைச் செயலாளரால் முறைப்படி ஒப்பமிடப்பட்டிருக்க வேண்டும்.

உ) மாவட்டக் குழுவினதும் மாகாண/பிரதேச அல்லது மத்தியக் குழுவினதும் முற்கூட்டிய அனுமதியின்றி நாட்டைவிட்டு வெளியேறலாகாது.

## 08. உறுப்பினர் ஒருவரது உரிமைகள்

அ) கட்சியின் அமைப்புகளுள் கட்சியினதும் அதனது அலுவல்களுடன் தொடர்பான விடயங்களைப் பற்றியக்கூட்டங்களிலும் கலந்துரையாடல்களிலும் சுதந்திரமாகப் பங்குபற்றலும் தனது கருத்துக்களைக் கட்சியின் இலட்சிய நோக்கிற்கும் கொள்கைக்கும் அமைய வெளிப்படுத்தலும்.

ஆ) கட்சியின் எந்த அமைப்பிற்கும் தீர்மானங்கள், பிரேரணைகள், அறிக்கைகள் சமர்ப்பித்தல்.

இ) கட்சியினதும் அதன் குழுக்களினதும் பதவிகட்கு தெரிவு செய்தலும் தெரிவு செய்யப்படலும்.

ஈ) கட்சியின் முடிவுகட்கமையவும் கட்சியின் ஏற்புடமையுடனும் வெகுஜன இயக்கங்களிலும் பாராளுமன்ற மற்றும் பிற தேர்தல்கள் உட்பட்ட கட்சியின் அனைத்துச் செயற்பாடுகளிலும் பங்குபற்றல்.

உ) தனக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும் நோக்கில் ஒரு விசாரணை நடாத்தப்படும் நிலையில் கட்சியின் எந்தவொரு அமைப்பிற்கும் தனது நிலைப்பாட்டை எடுத்துக் கூறுதலும் விளக்குதலும்.

ஊ) ட்சியையோ அதன் உறுப்பினர்களையோ பாருத்தமானபோது மட்டுமே கட்சியின் அமைப்புகளுக்குள் விமர்சிப்பது.

## 09. உறுப்பினர் ஒருவரது கடமைகள்

அ) கட்சியினதும் அதன் உறவு நிறுவனங்களினதும் செயற்பாடுகளில் பங்குபற்றுதலும் உட்கட்சி அரசியல் வாழ்விலும் நாட்டின் அரசியல் வாழ்விலும் ஈடுபடுதல்

ஆ) மாக்சிச—லெனினிச—மாவோ சேதுங் சிந்தனையையும் அதன் பட்டறிவையும், விருத்தியையும் பற்றி நின்று கட்சியின் யாப்புக்கும் கொள்கைக்கும் செய்நிரல்கட்கும் வேலை முறைகட்கும் விதிகட்கும் நடத்தை ஒழுக்க முறைக்கும் அமைவாகப் புரட்சிகர உள்ளுணர்வுடன் நடத்தல்.

இ) அனைத்து தனிப்பட்ட கடமைகட்கும் மேலாகத் தனது கட்சிப் பணிப்புகட்கு முன்னுரிமை வழங்கி ஒழுங்காகவும் தேவைக்கேற்பவும் பணியாற்றுதல்.

ஈ) தனது அரசியல் அறிவை மேம்படுத்தித் தனது கோட்பாட்டு, பண்பாட்டு, அறப்பண்புத் தராதரங்களை உயர்த்தல் வேண்டும்

உ) கட்சிப் பத்திரிகைகள், கட்சி அமைப்புகள் சார்ந்த வெளியீடுகள், மாக்சிசம்-லெனினிசம்-மாவோசேதுங் சிந்தனையின் தலையாய நூல்களையும் அதன் பட்டறிவையும் விருத்தியையும் கூட்டாகவும் தனியாகவும் கற்றலும் விவாதித்தலும் வேண்டும்

ஊ) கட்சியின் கொள்கைகள், முடிவுகள், தந்திரோபாயங்கள், நடைமுறை என்பவற்றை வகுப்பதிலும் அவற்றை நடைமுறைப்படுத்துவதிலும் உதவுதல், எங்கும் எப்போதும் கட்சியின் நலன்களைப் பாதுகாத்து நிற்றல்.

ஊ) மக்களை அமைப்பு வழிப்படுத்தித் தமது அரசியற் பொதுச் சமூகச் செயற்பாடுகளில் அவர்களை தொடக்கிவைத்து வழிநடத்தும் முகமாகவும் தனிமனிதர்களுடனும் வெகுசனங்களுடனும் அவர்களின் அரசியல் பொதுச் சமூகச் செயற்பாடுகளுடனும் கட்சியின் உறவை வலுப்படுத்துமுகமாகவும் மக்கள் மத்தியில் பணியாற்றல்.

எ) மக்களின் கூட்டு அரசியல், பொருளியல், பண்பாட்டு வாழ்வை முன்னேற்றவும் புரட்சிகர உள்ளுணர்வுடைய தலைமைத்துவத்தை வழங்கவும் மக்களிடமிருந்து கற்று மக்களுக்கு சேவையாற்றல்.

ஏ) கட்சிக்கு ஒழுங்காக நிதி வழங்கலும் தேவைக்கமைய கட்சிக்கு நிதி திரட்டல் செயற்பாடுகளை முன்னெடுத்தலும்.

ஐ) கட்சியின் கொள்கைகட்கும் செய்நிரல்கட்கும் மக்களின் ஆதரவை திரட்டுதல்.

ஒ) கட்சிக்குப் புதிய உறுப்பினர்களைச் சேர்த்தலும் கட்சியை வலுப்படுத்தி விருத்தி செய்தலும் மக்கள் மத்தியில் மத்திய தலைமையின் செல்வாக்கை மேம்படுத்தலும்.

## 10. உறுப்புரிமை இழப்பு

பின்வரும் தவறுகட்கு ஏற்றத்தக்கக் காரணமொன்றை தனது கிளைக்குக் கொடுக்கத் தவறுமிடத்து ஒரு உறுப்பினர் தனது உறுப்புரிமையை தானாகவே இழந்துவிடுவார்.

அ) தொடர்ச்சியாக மூன்று மாதங்கட்கு உறுப்புரிமைக் கட்டணத்தைச் செலுத்தத் தவறுதல்.

ஆ) அடுத்தடுத்து கட்சிக் கிளைக் கூட்டங்கள் மூன்றிற்கு வருகை தரத் தவறுதல்.

## 11. உறுப்புரிமை பதிவேட்டிலிருந்து உறுப்புரிமை நீக்கம்

அ) தொடர்ந்தும் தனது பொறுப்புக்களைப் புறக்கணித்து வருவதுடன் அதன் பயனாக ஒரு

உறுப்பினருக்குரிய தராதரங்கட்கு இசைவற்ற முறையில் நடந்து கொள்ளுகின்றமை தவிர்ந்து பிற வழிகளில் கட்சிக்கு விசுவாசமாக நடந்து கொள்ளும் உறுப்பினர் ஒருவரின் உறுப்புரிமை நீக்கப்பட இயலும். அத்தகையதொரு நிலைமையில், அந்த உறுப்பினர் சார்ந்த கிளை அவர் தனது குற்றமின்மையை நிறுவ அந்த உறுப்பினருக்கு ஒரு வாய்ப்பளிக்க வேண்டும். அந்த உறுப்பினர் விளக்கமொன்றைத் தரத் தவறுமிடத்து அல்லது தரப்பட்ட விளக்கம் திருப்திகரமாக அமையாதவிடத்து அக்கிளை உறுப்பினரின் பெயரை உறுப்புரிமைப் பதிவேட்டிலிருந்து நீக்க முடிவெடுக்கலாம்.

ஆ) உறுப்புரிமை பதிவேட்டிலிருந்து உறுப்புரிமையை நீக்குவதற்கு முன்னர் பின்வரும் செயன்முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

I. உறுப்பினரின் நீக்கத்திற்கான தீர்மானம் கிளைக்கு, உயரிய நிறுவனத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ல் வேண்டும். கூறப்பட்டதீர்மானம் நீக்கத்தைப் பரிந்துரைப்பதற்கான காரணங்களைக் கொண்டிருக்க வேண்டும்.

II. தீர்மானத்தைப் பற்றியும் உயரிய நிறுவனம் அதனைக் கவனிப்பில் எடுத்ததற்குரிய இடத்தையும் நேரத்தையும் உறுப்பினருக்குத் தெரியப்படுத்த வேண்டும். தனக்கெதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகட்கு மறுமொழி கூற உறுப்பினருக்கு ஒரு வாய்ப்பளிக்கப்பட வேண்டும்.

இ) இந்த யாப்பின் வாசகம் 11(அ)வின் கீழ் தனது உறுப்புரிமையை இழக்கும் ஒரு உறுப்பினர், தனது பெயரை உறுப்புரிமைப் பதிவேட்டினின்று நீக்கும் முடிவிற்கெதிராக மத்தியக் குழு உட்படக் கட்சியின் உயரிய அமைப்பு ஒன்றுக்கோ, அனைத்திற்குமோ மேன்முறையிட இயலும். இவ்விடத்து மத்தியக் குழுவின் முடிவே இறுதியானதும் முற்று முடிவானதுமாகும்.

## 12. ஒழுக்காற்று நடவடிக்கை

அ) கட்சியின் நலன்களுக்கு கேடாகவோ கட்சியின் யாப்பு,

நடத்தை ஒழுக்கமுறைக்கோவை தீர்மானங்கள், கொள்கைகள், செய்நிரல்கள், முடிவுகள், ஒழுக்காறு என்பவற்றில் எதையும் மீறும் வகையிலோ செயற்படுவதாகக் காணப்படும் உறுப்பினர் ஒருவருக்கோ கட்சியின் நிறுவனமொன்றுக்கோ எதிராகப் பொருத்தமானவாறு கட்சியின் மத்தியக் குழுவோ மத்திய கட்டுப்பாட்டு ஆணைக்குழுவே பொருத்தமான ஒழுக்காற்று நடவடிக்கையை அல்லது நடவடிக்கைகளை எடுக்க இயலும்.

ஆ) பின்வரும் ஒழுக்காற்று நடவடிக்கைகளில் ஒன்றோ அதிகமோ கட்சியின் நிறுவனமொன்றுக்கு எதிராக எடுக்கப்படக்கூடும்.

I. கட்சிக்குள்ளான விமர்சனம்

II. பகிரங்க விமர்சனம்

III. நிறுவனத்தின் குழுவை மறுசீரமைத்தல்

IV. நிறுவனத்தின் குழுவைக் கலைத்து அதன் அவசர அலுவல்களை கவனிப்பதற்கான புதிய குழுவொன்றை நிறுவுதல்.

V. முழு நிறுவனத்தையும் கலைத்துப் புதிய உறுப்பினர்களைச் சேர்த்தல்.

இ) பின்வரும் ஒழுக்காற்று நடவடிக்கைகளில் ஒன்றோ அதிகமோ கட்சி உறுப்பினர் ஒருவருக்கு எதிராக எடுக்கப்படக்கூடும்.

I. கட்சிக்குள்ளான விமர்சனம்

II. பகிரங்க விமர்சனம்

III. நிறுவனத்திற்குள் அனைத்துப் பொறுப்புகளினின்றும் அவரை விடுவித்தல்.

IV. நிறுவனத்திற்குள் அவர் வகிக்கும் அதிகாரபு'ர்வமான பதவிகளிலிருந்து விலக்கல்.

V. இரண்டு ஆண்டுகட்கு மேற்படாத காலத்துக்குக் கட்சிக்குள் எந்தப் பதவியையும் ஏற்கத் தடைவிதித்தல்.

VI. வேட்பாள உறுப்பினர் மட்டத்திற்குக் கீழிறக்கல்.

VII. உறுப்புரிமைப் பதிவேட்டிலிருந்து பெயரை இடைநிறுத்தல் அல்லது நீக்கல்.

VIII. கட்சியிலிருந்து வெளியேற்றல்.

ஈ) உறுப்பினர் ஒருவர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட முன்னர், அவர் தனது நியாயத்தை எடுத்துரைக்க ஒரு வாய்ப்பளிக்கப்பட வேண்டும்.

உ) ஒரு உறுப்பினருக்கு எதிராக எடுக்கப்பட்ட எந்தவொரு ஒழுக்காற்று நடவடிக்கையும் அவரது உறுப்புரிமை அட்டையில் குறிக்கப்பட வேண்டும்.

**13. கட்சியிலிருந்து வெளியேற்றல்**

அ) உறுப்பினர் ஒருவரை கட்சி பின்வருங் காரணங்களில் எதற்காகவும் வெளியேற்றலாம்.

I. கட்சியின் யாப்பு, ஒழுக்கமுறைக்கோவை, தீர்மானங்கள் கொள்கைகள், செய்நிரல்கள், முடிவுகள், ஒழுக்காற்று என்பவற்றில் எதையும் மீறல்.

II. கட்சிக்குள் குழுப்பிரிவுகளை ஏற்படுத்தல் அல்லது அத்தகைய குழுப்பிரிவில் உறுப்பினராக இருத்தல்.

III. கட்சியைப் பலவீனப்படுத்தவோ, பிளவுப்படுத்தவோ, சீர்குலைக்கவோ, அழிக்கவோவான நோக்கிற் செயற்படல்.

IV. கட்சிக்கும் அதன் உறுப்பினர்கட்கும் எதிரான பொய்களையோ, உண்மைக்குப் புறம்பான அல்லது தவறான கூற்றுக்களையோ பரப்பல்.

V. கட்சி நிறுவனங்கட்கு வெளியே கட்சியை விமர்சிப்பது அல்லது குற்றஞ்சாட்டுவது.

VI. தனிப்பட்ட தீய நடத்தை

VII. வாசகம்/ விதி 9இன் கீழ் தரப்பட்டுள்ளவாறான கடமைகளைச் செய்யத் தவறுதல்.

ஆ) உறுப்பினர் ஒருவரை கட்சியிலிருந்து வெளியேற்றுவதற்கு முன்னர் பின்வரும் செயல்முறைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

I. கட்சி உறுப்பினர் ஒருவரிடமிருந்தோ ஒரு நிறுவனத்திடமிருந்தோ ஒரு முறைப்பாட்டை கேட்ட பின்போ தனது சொந்த அவதானிப்பின் மூலமோ, குறிப்பிட்ட உறுப்பினர் கட்சி நலன்கட்குப் பாரிய வகையிற் கேடாகவோ அல்லது கட்சியின் யாப்பு,

நடத்தை, ஒழுக்கமுறைக்கோவை, தீர்மானங்கள், கொள்கைகள், செய்நிரல்கள், முடிவுகள், ஒழுக்காறு என்பவற்றில் எதையாவது மீறும் வகையில் செயற்பட்டுள்ளார் என்று மத்தியக் குழு தனக்கு உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். திருப்தியாக அமையாத விளக்கமளிக்கப்பட்டாலோ, கோரப்பட்ட கால எல்லைக்குள் விளக்கமளிக்கத் தவறினாலோ அவ்விடயம் விசாரணைக்காக மத்திய கட்டுப்பாட்டு ஆணைக்குழுவிற்குப் பாரப்படுத்தப்பட வேண்டும்.

II. சம்பந்தப்பட்ட உறுப்பினருக்குக் குற்றப் பத்திரம் பரிமாறப்பட்டு, மத்திய கட்டுப்பாட்டு ஆணைக்குழு அவரை விசாரிக்க வாய்ப்பளிக்கப்படும்.

III. தன்னிடம் பாரப்படுத்தப்பட்ட விடயத்தை விசாரித்த பின்பு மத்திய கட்டுப்பாட்டு ஆணைக்குழு அவ்விடயம் பற்றி மத்திய குழுவுக்கு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டும்.

IV. மத்திய கட்டுப்பாட்டு ஆணைக்குழு சமர்ப்பித்த அறிக்கையின் அடிப்படையில் குறிப்பிட்ட உறுப்பினரை வெளியேற்றுவதா என்பதை மத்தியக்குழு முடிவு செய்யலாம்.

இ. மத்திய குழுவின் முடிவே இறுதியானதும் முற்று முடிவானதுமாகும்.

ஈ. வாசகம் 12(இ)இன் கீழ் ஒரு உறுப்பினருக்கெதிரான முடிவு எடுக்கப்பட்டிருப்பின் அவ்வுறுப்பினர் அம்முடிவிற்கெதிராக மத்தியக் குழுவிற்கு மேன்முறையீடு செய்யலாம். மத்திய குழுவின் முடிவே இறுதியானதும் முற்று முடிவானதுமாகும்.

**14. பாராட்டுக்கள்**

அ) கட்சிக்கு மெச்சத்தக்க சேவையாற்றிய கட்சி அமைப்புக்களும் உறுப்பினர்களும் உறுப்பினரல்லாதோரும் பாராட்டுக்களைப் பெறலாம்.

ஆ) மேற்கூறியவாறான பாராட்டை வழங்குவதற்கான காரணத்தைக் கட்சியின் அகில இலங்கை மாநாட்டுக்கு (கட்சி மாநாடு என்றும் குறிப்பிடப்படும்) விளக்கி மத்தியக் குழுவோ கட்சியின் நிறுவனமெதுவுமோ சமர்ப்பிக்கும்

அறிக்கையின் முடிவுகளை ஏற்ற பின்பு கட்சி மாநாடு கட்சியின் பாராட்டுக்களை வழங்கும்.

இ) உறுப்பினர் ஒருவருக்கு வழங்கப்படும் பாராட்டு அவரது உறுப்பினர் அட்டையில் குறித்துக்கொள்ளப்படும்.

**15. விலகல்**

கட்சியிலிருந்தோ, கட்சியில் வகிக்கும் அதிகாரபு'ர்மான பதவி எதிலுமிருந்தோ விலகவோ கட்சியிலிருந்து ஓய்வுபெறவோ விரும்பும் உறுப்பினர் ஒருவர் தான் விலகவோ, ஓய்பெறவோ வேண்டுவதை உரிய கிளைக்கோ, கட்சி நிறுவனத்துக்கோ தெரிவிக்க வேண்டும். மத்தியக்குழு உறுப்பினரின் விலகலையோ, ஓய்வுபெறலையோ ஏற்றதையடுத்து அவ்வுறுப்பினர் கட்சியின் உறுப்பினராகவோ, பதவி வகிப்பவராகவோ இருக்கமாட்டார்.

**16. நிறுவனக் கோட்பாடுகள்**

புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியின் தன்மையும் நிறுவன அமைப்பு முறையும் ஜனநாயக மத்தியத்துவக் கோட்பாடுகளின் அடிப்படையிலானவை. ஜனநாயக மத்தியத்துவம் என்பது மையப்படுத்தப்பட்ட தலைமையின் வழி நடத்தலின் கீழ் உட்கட்சி ஜனநாயக அடிப்படையிலான மையப்படுத்திய தலைமை. உட்கட்சி ஜனநாயகமானது மையப்படுத்தப்பட்ட தலைமையினதும் பாட்டாளிவர்க்க ஜனநாயகத்தினதும் ஒன்றிணைவையுடையதும், கட்சியின் புரட்சிகர வெகுஜன மார்க்கத்தை விருத்திசெய்து நடைமுறைப்படுத்துவதற்கான அடிப்படையானதொரு வழிவகையுமாகும்.

அ) விதி விலக்கான சூழ்நிலைகள் தவிர்ந்து, உச்சி முதல் அடிவரை கட்சியின் அனைத்து உறுப்புக்களும் தெரிவுசெய்யப்பட்டவையாகும்.

ஆ) ஒரு ஒழுங்கமைப்புக் குழுவின் உடனடியான தெரிவு இயலாதவிடத்து உயரிய நிறுவனம் உறுப்பினர்களை நியமித்து ஒழுங்கமைப்புக் குழுவை அமைக்கலாம்.

இ) குழுக்களின் உறுப்பினர்கள் கட்சியின் உரிய நிறுவனத்தின் கலந்தாய்வுகளிலோ, கூட்டத்திலோ தெரிவுசெய்யப்பட்டு உயரிய நிறுவனத்தால் அங்கீகரிக்கப்படலாம்.

ஈ) கட்சி நிறுவனத்தின் பதவிகட்கும் பணிநிலைகட்கும் தெரிவு செய்யப்படுவதற்குக் கொள்கை அலுவலர்களில் உறுதியும் செய்கடமைகளை உரிய நேரத்தில் நிறைவேற்றும் வல்லமையும் அடிப்படையானவை.

உ) உட்கட்சித் தேர்தல்களிலும், கட்சிக் கூட்டங்களில் முடிவுகளை வந்தடைவதிலும் கலந்துரையாடியும் விவாதித்தும் ஒருமனமான முடிவை வந்தடைவதற்கு வழங்கப்படுகிறது. நியாயமானளவு ஜனநாயகமான உரையாடலின் எல்லைகட்குள் ஒருமனமான முடிவை எட்டுவதற்கான வாய்ப்பை முற்றாகப் பயன்படுத்திய பின்பு மட்டுமே பெரும்பான்மைக் கருத்தினை அறிதல் என்னும் ஜனநாயகக் கோட்பாட்டின் அடிப்படையில் முடிவுகள் எட்டப்படுகின்றன. எவ்விடயத்திலும் சமமான கருத்துப் பிரிவினை ஏற்படின் அவ்விடயம் அடுத்த உயரிய கருத்துக் களத்தின் கவனிப்பிற்கு அனுப்பப்படும். உயரிய கருத்துக் களத்தின் முடிவு, சம்பந்தப்பட்ட குழுமத்தின் செயலாளர் பொருத்தமான நடவடிக்கை எடுக்குமாறு அவருக்குத் தெரிவிக்கப்படும்.

ஊ) கட்சி முழுவதும் பின்வரும் கோட்பாடுகளின் அடிப்படையில் ஒரு சீரான ஒழுக்காற்றுக்கு உட்படவேண்டும்.

- I. தனியொருவர் அலகிற்கு கீழ்ப்படிவானவர்.
- II. சிறுபான்மை பெரும்பான்மைக்குக் கீழ்ப்படிவானது.
- III. தாழ்ந்த அலகு உயர்ந்த அலகுக்கு கீழ்ப்படிவானது.
- IV. சகல உறுப்பினர்களும் அலகுகளும் மத்தியக் குழுவிற்கு கீழ்ப்படிவானர்கள்.
- V. கட்சி மாநாடே கட்சியின் அதியுயரிய அங்கம்.

எ) ஆரம்ப அலகு கிளையாகும். அது கட்சிக்கும் மக்களுக்கும் இடையிலான நேரடியான இணைப்பாகும். மக்களுடையதும் பிற அலகுகளினதும் கருத்துக்கள் அவ்வலகாற் கவனமாக ஆராயப்பட்டுத் தொகுக்கப்பட்டு ஒன்றிணைக்கப்பட்டுக் கட்சியின் கொள்கைகளை வகுக்கவும் முன்னேற்றவும் பயன்படுத்தப்படும்.

ஏ) சர்வதேசப் பண்புகளையுடைய பிரச்சினைகளாயினும்

இலங்கைக்கு உட்பட்ட பிரச்சினைகளாயினும் மாகாணமோ, மாவட்டமோ, பிரதேசமோ சார் பிரச்சினைகளாயினும் மத்திய குழுவே அவை பற்றி இறுதி முடிவெடுக்கும். மத்திய குழுவினதும் அரசியற் குழுவினதும் கவனிப்பிற்காகத் தமது கருத்துக்களை அனுப்புமாறு தாழ்நிலைக் குழுக்கள் ஊக்குவிக்கப்படுகின்றன. ஒரு மாகாணத்தையோ, மாவட்டத்தையோ, பிரதேசத்தையோ சார்ந்த அனைத்துப் பிரச்சினைகளிலும் அதற்குரிய அரசியல் நிறுவனமே பொதுவாக முடிவெடுக்கும். எனினும் அவ்வாறான எந்த முடிவும் கட்சியின் உயரிய நிறுவனமொன்றின் நிலைப்பாட்டிற்கு முரணாகச் செல்லலாகாது.

ஐ) கட்சிக்குள் குழுப் பிரிவுகளை ஏற்படுத்துவது கட்சிக்குத் தீங்கானது. குற்றத்தின் கனதியைப் பொறுத்து குழுப் பிரிவுகளை ஏற்படுத்தும் முயற்சிகள் கட்சியிலிருந்து வெளியேற்றல் உட்பட ஒழுக்காற்று நடவடிக்கைகளாற் தண்டிக்கப்படக் கூடியன.

ஒ) கட்சியின் அகவாழ்வுச் செயலெல்லையுள் வழிநடத்தும் ஜனநாயக மத்தியத்துவக் கோட்பாடுகள் கீழே தரப்பட்டுள்ளன.

I. தாழ்நிலையிலிருந்து உயர் நிலைக்கும உயர்நிலையிலிருந்து தாழ்நிலைக்கும் ஒழுங்கான அறிக்கைப்படுத்தல்.

II. கட்சியின் வாழ்வையும் கொள்கையையும் வேலையையும் பாதிக்கும் அனைத்துப் பிரச்சினைகளிலும் கட்சிக்குள் தடையற்ற மனந்திறந்த கலந்துரையாடல்.

III. சகோதரத்துவமும் தோழமையும் கொண்ட உறவையும் பரஸ்பர ஆதரவையும் விருத்தி செய்வதன் மூலம் கட்சி உணர்வை வலுப்படுத்தல், கட்சித் தோழர்களைப் பரிவுடன் நடத்துவதன் மூலம் தவறுகளைத் திருத்தல், அவர்களையும் அவர்களது வேலைகளையும் தனி நிகழ்வுகளதும் தவறுகளதும் அடிப்படையிலன்றிக் கட்சிக்காக அவர்கள் ஆற்றிய சேவை முழுவதினதும் பதிவுச் சான்றின் அடிப்படையில் மதிப்பிடுதல்.

IV. கட்சி இட்ட பணிகளை சரிவர நிறைவேற்றல்,

மத்தியத்துவமும் ஜனநாயகமுமான இரண்டும், ஒழுக்காறும் சுதந்திரமுமாகிய இரண்டும், உணர்வில் ஒருமைப்பாடும் தனிப்பட்ட முன் முயற்சியுமாகிய இரண்டும் இருக்கக்கூடிய ஒரு அரசியல் நிலைமையை உருவாக்குவது அவசியம்.

ஓ) மத்தியக்குழு முதலாக பிரதேச/மாகாண/மாவட்டக் குழுக்கள் வரையிலான தலைமைக் குழுக்கள் புரட்சிகர உணர்வு கொண்ட கட்சித் தோழர்களானவையாய் அமைய வேண்டும்.

ஔ) கட்சி நிறுவனக் கோட்பாடுகளில் அதி முக்கியமான ஒன்று விமர்சனமும் சுயவிமர்சனமும் ஆகும். அதைச் செயற்படுத்துவது கட்சிக்குப் பொதுப்படவும் தலைமைக்கும் கட்சிக்கும் கிளைகட்கும் கட்சி உறுப்பினர்கட்கும் முற்றாக அத்தியாவசியமானதாகும்.

I. விமர்சனமும் சுயவிமர்சனமும் கட்சியின் மார்க்கத்தினதும் கட்சியின் நடைமுறையினதும் அடிப்படையில் அமையவேண்டும்

II. விமர்சனம் கட்சிக்குள்ளும் சம்பந்தப்பட்ட கிளைக்குள்ளும் செய்யப்பட வேண்டுமேயன்றி வெளியில் அல்ல.

III. கட்சியின் உயரிய குழுமத்தையோ உறுப்புக்களையோ பற்றிய விமர்சனங்கள் எழுத்தில் முன்வைக்கப்பட்டு உரிய குழு மூலம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

IV. ஒற்றுமை–விமர்சனம், சுயவிமர்சனம்-ஒற்றுமை எனும் முறைவழியு'டாகக் கட்சியின் ஒற்றுமை பெறப்படுகிறது.

## 17. கட்சியின் நிறுவனக் கட்டமைப்பு

அ) கட்சியின் அகில இலங்கை மாநாடு

கட்சியின் அகில இலங்கை மாநாடு (கட்சி மாநாடு என்றும் கூறப்படும்) முழு நாட்டுக்குமான கட்சியின் அதியுயரிய குழுமமாகும். அது கட்சியின் கருத்தியல், அரசியல், நிறுவன மார்க்கங்களைத் தீர்மானிக்கும்.

I. வழமையான சூழ்நிலைகளில் கட்சி ஐந்தாண்டுகட்கு ஒரு முறை நடத்தப்படும். சிறப்பான

சூழ்நிலைகளில் அது நிகழவுள்ள காலத்
கூட்டப்படலாம் அல்லது பிற்போடப்படலாம்.

II. கட்சியின் மொத்த உறுப்பினர் தொ
சதவீதமானோரைப் பிரதிநிதித்துவப்படுத்தும்
மாவட்ட, பிரதேசக் குழுக்களின் வேஎ
அடிப்படையில் மத்தியக்குழு கட்சி
கூட்டலாம்.

III. கட்சி மாநாடு மாகாண, மாவட்ட
குழுக்களிலும் நேரடியாக மத்தியக் குழு
செயற்படும் கிளைகளாலும் மாநாட்டுக்கா
செய்யப்பட்ட பேராளர்களைக் கொண்டிருக்க

IV. கட்சி மாநாட்டுக்குப் பேரா
பிரதிநிதித்துவத்தின் அடிப்படை, த
மாகாண/மாவட்டத்திலும் பிரதேசத்திலும்
விகிதாசார வலிமையை உரியவாறு கருத்
மத்தியக் குழுவால் முடிவு செய்யப்படும்.
தனக்குக் கீழே இயங்கும் கிளைகளில் இ
பேராளர் தொகையை அவற்றின்
வலிமையின் அடிப்படையில் மத்தியக்கு
செய்யும்.

V. மத்தியக்குழு உறுப்பினர்கள் கட்சி ம
பதவிமுறை சார்ந்த பேராளர்கள் ஆவார்கள்.

ஆ) கட்சி மாநாட்டின் செய்கடமைகளும் அதிக

I. கட்சியின் செய்நிரல், யாப்பு இ
ஆவணங்களை மாற்றலும், புனராய்ந்
திருத்தலும்

II. கட்சியின் அரசியல் நிறுவ
அறிக்கைகளை கலந்துரையாடி ஏற்றல்.

III. சமகால நிலைமைகட்கு ஏற்ப
மூலோபாய, தந்திரோபாய மார்க்
தீர்மானித்தல்.

IV. கலந்தாலோசித்தல் மூலமும்
நிகழுங்கால் இரகசிய வாக்கெடுப்பு மூலமு
மத்தியக்குழு, மத்திய கட்டுப்பாட்டு அ

V. கட்சி மாநாட்டுக்குரிய நிகழ்ச்சி நிரலையும் செயல்முறையையும் முடிவு செய்தல்.

VI. கட்சி மாநாட்டு அலுவல்களை நடத்துவதற்கான தலைமைக் குழுவை தெரிவு செய்தல்.

VII. கட்சி மாநாட்டின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்ட முறைப்பாடுகள், ஆலோசனைகள், பிரச்சினைகள் மற்றும் அத்தகைய பிற விடயங்களைக் கவனத்தில் எடுத்து முடிவு காணல்.

VIII. உறுப்பினர்கள் செலுத்துதற்குரிய உறுப்புரிமைக் கட்டணத்தையும் நன்கொடையையும் தீர்மானித்தல்.

இ) அகில இலங்கை நிறை பேரவை

I. கொள்கை, ஒழுக்காறு, யாப்புப் பிரச்சினைகள், வேலைச் செய்நிரலும் வேலைமுறையும் என்பன தொடர்பான முக்கியமான அலுவல்களில் கூடிய விரிவுடைய கலந்தாலோசனைக்காக மத்தியக்குழு வருடமொருமறை அகில இலங்கை நிறைப் பேரவையை கூட்டும்.

II. மத்தியக்குழு உறுப்பினர்கள், நிறை பேரவைக்குப் பதவிமுறை சார்ந்த பேராளார்களாவர். பிற பேராளர்கள் உறுப்புரிமை வலிமையின் அடிப்படையில் மத்தியக் குழுவினால் முடிவு செய்யப்பட்ட கிடைப்புப் பங்குகளின் அடிப்படையில் மாகாண, மாவட்ட/ பிரதேசக் குழுக்களாலும் நேரடியாக மத்திய் குழுவின் கீழ்ச் செயற்படும் கிளைகளாலும் தெரிவு செய்யப்டுவர்.

III. பேராளர் ஒருவரால் நிறைப் பேரவையின் முன் வைக்கப்படும் எந்தவொரு நிகழ்ச்சி நிரல் விடயத்தையும் நிறை பேரவை கவனத்திற்கு எடுக்கலாம்.

IV. நிறை பேரவை, பதவியிலுள்ள மத்தியக்குழு உறுப்பினர்களை அங்கீகரிக்கலாம் அல்லது மத்தியக் குழுவுக்கு புதிய உறுப்பினர்களைத் தெரிவு செய்யலாம்.

V. நிறை பேரவையின் முடிவுகள் மத்தியக் குழுவைக் கட்டுப்படுத்தும்.

ஈ) மத்தியக் குழு

I. நிறை பேரவை மத்தியக் குழுவுக்குப் புதிய உறுப்பினர்களைத் தெரிவு செய்யலாம் எனும் ஏற்பாட்டிற்குட்பட்டு, மத்தியக் குழுவைத் தெரிவு செய்யும் கட்சி மாநாடு மத்தியக் குழுவின் உறுப்பினர் எண்ணிக்கையையும் முடிவு செய்யும். தேர்தல் ஏகமனதாக இல்லாதவிடத்து இரகசிய வாக்கெடுப்பால் நடத்தப்படும்.

II. இரண்டு கட்சி மாநாட்டுக்கு இடைப்பட்ட காலத்தில் மத்தியக் குழுவே கட்சியின் அதியுயர்ந்த அங்கமாகும்.

III. தேவையானபோது மத்தியக்குழு இங்கு குறிப்பிடப்படும் பதவிப் பொறுப்புகட்குப் புறம்பான புதியவற்றை உருவாக்கலாம் எனும் ஏற்பாட்டுக்கு உட்பட்டு, மத்தியக்குழு தன் உறுப்பினர்களிலிருந்து பொதுச் செயலாளர், தேசிய அமைப்பாளர், சர்வதேச அமைப்பாளர், பொருளாளர், துணைப் பொருளாளர்கள், அரசியற் குழு, செயலாளர் குழும உறுப்பினர்கள் ஆகியோரைத் தெரிவு செய்யும்.

IV. ஆண்டுக்குக் குறைந்த பட்சம் மூன்று கூட்டங்கள் என்பதற்குட்பட்டு, மத்தியக்குழு ஏறத்தாழ மூன்று மாதங்கட்கு ஒருமுறை கூடும்.

. மத்தியக்குழு முழுக் கட்சியையும் பிரதிநிதித்துவப்படுத்தும் என்பதுடன் முழுக் கட்சியினதும் வேலைகளை நெறிப்படுத்துவதற்கும் பொறுப்பாகவிருக்கும். இவ்வாறு, கட்சி மாநாட்டின் முடிவுகட்கமைய கட்சிக்குத் தொடர்பான எவ்விடயதிலும் முழு அதிகாரத்துடன் முடிவுகளை எடுக்கும் வல்லமையும் உரிமையும் அதற்கு உண்டு.

VI. கட்சியினதும் அதன் அலுவலகங்களினதும் நிர்வாகத்திற்கு மத்தியக் குழுவே முழுப் பொறுப்புடையது.

VII. இரண்டு மாநாட்டுக்கு இடையிலோ நிறை

பேரவை கூட்டங்கட்கு இடையிலோ மத்தியக் குழு உறுப்பினர் தொகையில் ஏற்படும் வெற்றிடங்களைத் தெரிவு முறையிற் புதிய உறுப்பினர்களைச் சேர்த்து நிரப்பலாம். தெரிவு முறையில் உட்சேர்க்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை மத்தியக் குழுவின் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் மூன்றில் ஒரு பங்கை மீறலாகாது. மத்தியக் குழுவில் பதவி வகிப்போரிடையே வெற்றிடங்கள் ஏற்படின், மத்தியக்குழு அவ்வெற்றிடங்களை கட்சி மாநாட்டிலோ நிறை பேரவைக் கூட்டத்திலோ தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களிடையே இருந்து நிரப்பலாமேயன்றி, தெரிவு முறையிற் சேர்க்கப்பட்ட உறுப்பினர்களிடையே இருந்தல்ல.

VIII. பொதுச் செயலாளரே மத்தியக் குழுக்கூட்டங்களின் காலத்தையும் இடத்தையும் முடிவு செய்து மத்தியக் குழுக் கூட்டத்தைக் கூட்டுவார். பொதுச் செயலாளர் மத்தியக் குழுக் கூட்டத்தை கூட்டத் தவறுமிடத்துத் தேசிய அமைப்பாளரோ, மத்தியக் குழுவின் உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்கிற்குக் குறையாதோரோ மத்தியக் குழுக் கூட்டத்தைக் கூட்டலாம்.

IX. தேவையானதெனக் கருதும்போது மத்தியக்குழு நீடித்த மத்தியக் குழுவின் அல்லது நிறை பேரவையின் அமர்வுகளைக் கூட்டலாம்.

X. குறிப்பான தேவைகளுக்காக மத்தியக்குழு துணைக் குழுக்களை நியமிக்கலாம். இத்தகையத் துணைக் குழுக்கள் மத்தியக் குழுவின் கீழ் மத்தியக் குழுவால் நியமிக்கப்பட்ட காலத்திற்குச் செயற்படலாம்.

XI. மத்தியக்குழு உறுப்பினர்களல்லாத கட்சி உறுப்பிர்களை மத்தியக்குழு தனது கூட்டங்கட்கு அழைக்கலாம். அழைக்கப்பட்ட உறுப்பினர்கட்கு மத்தியக் குழுவின் கலந்தாலோசனைகளிற் பங்குபற்றும் உரிமையுண்டு. எனினும் வாக்களிப்பதற்கு உரிமையில்லை.

XII. கட்சியின் கொள்கையில் தேவைப்படும் உடனடியான பெரிய மாற்றங்கள்

முன்மொழியப்படும்போது நீட்டித்த
அல்லது நிறை பேரவையினது
வேண்டும். இத்தகைய கூட்டங்கள்
மாற்றங்கள் கட்சியின் அ
செல்லுபடியாக்கலுக்கு உட்பட்ட
XIII. மத்தியக்குழு கட்சிய
முரணாகச் செயற்படுவதாக காண
பெரும்பான்மையைப் பிரதி
மாகாண/மாவட்ட, பிரதேசக் குழு
வாசகம் (XII)இல் உள்ளவாறு
ஒன்றின் கூட்டத்திற்கு அழைப்
மத்தியக்குழு அத்தகைய கூ
வேண்டும். மத்தியக்குழு அத்தகை
தவறுமிடத்து கட்சியின்
பிரதிநிதித்துவப்படுத்தும் மாகாண
குழுக்களுக்கு உயரிய கருத்துக்
அழைப்புவிடும் உரிமையுண்டு.
XIV. யாப்பின் கீழும் யாப்பி
உறுப்பினர்கட்கான விதிகளையு
முறைகளையும் உப விதிக
உருவாக்கலாம்.
XV. மத்தியக் கட்டுப்பாட்டு
அல்லது மத்திய விசாரணைக்
இரண்டிற்கும் அவற்றின் பரிந்து
கருதும் எவ்விடயத்தையும் மத்தி
அனுப்பிவைக்கலாம்.

மாநாட்டில் திருத்தங்களுக்கான பிரேரணையொன்றின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்ளப்படலாம்.

XIX அடுத்த கட்சி மாநாடு வரையான காலத்தில் கட்சி ஒழுக்காற்று விடயங்கள் அனைத்திலும் இறுதித் தீர்ப்பு வழங்கும் அதிகாரம் மத்தியக் குழுவுக்கு உண்டு.

XX. கட்சியின் பல்வேறு நிறுவனங்களை அமைக்கவும், கலைக்கவும், நிறுவனங்களின் அதிகார வரையறைகளைத் தீர்மானிக்கவும் மத்தியக் குழுவுக்கு அதிகாரம் உண்டு.

XXII. கட்சியின் முழுநேர ஊழியர்களையும் நிர்வாக உழைப்பாளர்களையும் நியமிக்கவோ பதவி விலக்கவோ மத்தியக் குழுவிற்கு அதிகாரம் உண்டு.

XXIII. கட்சியின் அனைத்து நிறுவனங்களினதும் செயலாளர்களின் தெரிவுகளை ஏற்கவோ, மறுக்கவோ மத்தியக் குழுவுக்கு அதிகாரம் உண்டு.

XXIV. கட்சியின் எந்த உறுப்பினரதும் கட்சியின் உறுப்புரிமையை ஏற்கவோ, மறுக்கவோ, நீக்கவோ மத்தியக் குழுவுக்கு அதிகாரம் உண்டு.

XXIV. தன்னுடைய அதிகாரங்களில் எல்லாவற்றையும் தான் நியமித்த ஒரு குழுவுக்கோ, கட்சியின் பதவி வகிப்போருக்கோ ஒப்படைப்பதற்கும் அவ்வாறு ஒப்படைத்ததை மீளப்பெறுவதற்குமான அதிகாரம் மத்தியக் குழுவுக்கு உண்டு.

XXV. கட்சியின் முழுநேர ஊழியர்களினதும் நிர்வாக உழைப்பாளர்களினதும் உதவித் தொகையை மத்தியக்குழு முடிவு செய்யும்.

**18. கட்சியின் பதவிநிலை**

அ) கட்சியின் பதவி வகிப்போர் பொதுச் செயலாளர், தேசிய அமைப்பாளர், சர்வதேச அமைப்பாளர், பொருளாளர், துணைப் பொருளாளர்கள், அரசியற் குழு உறுப்பினர்கள், செயலாளர் குழுமத்தினர் என்போராவர். ஆயினும் மேற்குறிப்பிட்டோருக்கும் மேலதிகமாகப் பதவிகளை மத்தியக்குழு உருவாக்கலாம் என்ற ஏற்பாட்டிற்குட்பட்டு, அவர்கள் அனைவரும் மத்தியக் குழுவால் தன் உறுப்பினர்கள் மத்தியிலிருந்து தெரிவு செய்யப்படுவர்.

ஆ) பொதுச் செயலாளர், கட்சியின் தலை
நிர்வாகியாவார். அவர் மத்தியக் குழுவினதும்
குழுவினதும் செயலாளர் குழுமத்தினதும் அலுவல்
அழைப்பித்துத் தலைமை தாங்கி நடத்துவார்.

I. கட்சியின் அனைத்து நிறுவனங்க
எக்கூட்டத்திலும் பங்குபற்றும் உரிமை
அதிகாரமும் பொதுச் செயலாளருக்கு உண்டு.
சார்பில் இத்தகைய கூட்டங்களில் பங்குபற்
மத்தியக்குழு உறுப்பினர் எவருக்கும் பொதுச் செய
அதிகாரம் வழங்கலாம்.

II. கட்சியின் சார்பில் பேசவும், கட்சியின் ச
அறிக்கைகளை விடுக்கவும் பொதுச் செயலா
உரிமை உண்டு.

III. கட்சியின் சார்பில் எந்த ஆவணத்திலும் ஒ
பொதுச் செயலாளருக்கு உரிமையுண்டு.

IV பொதுச் செயலாளரின் அதிகாரங்க
கடமைகளையும் உரிமைகளையும் மத்தி
தீர்மானிக்கும்.

இ) தேசிய அமைப்பாளர் கட்சியின் அ
நிறுவனங்கட்கும் பொறுப்பானவர் என்
அந்நிறுவனங்களை பொறுப்பேற்றிருப்பவரு

I. கட்சியின் அனைத்து நிறுவனங்களின
கூட்டத்திலும் பங்குபற்றும் உரிமையும் அதி
தேசிய அமைப்பாளருக்கு உண்டு.

II. கட்சியின் சார்பில் பேசவும் கட்சியின்
அறிக்கைகளை விடுக்கவும் தேசிய அமைப்ப
உரிமை உண்டு.

III. பொதுச் செயலாளர் இல்லாதவிடத்து,
குழவாற் செய்யுமாறு பணிக்கப்படுபராயின்,
செயலாளரின் இடத்திற் கட்சியின் சார்பா
ஆவணத்திலும் ஒப்பமிட தேசிய அமைப்
உரிமையுண்டு.

IV. தேசிய அமைப்பாளரின் அதிகாரங்
... மத்தியக்குழு தீர்மானிக்கும்.

கொள்கைக்கும் நடைமுறைக்கும் பொறுப்பாவார்.

I. சர்வதேச அமைப்பாளர் சர்வதேச அமர்வுகளிலும், தோழமைக் கட்சிகளினது கூட்டங்களிலும், ஏகாதிபத்திய எதிர்ப்பு சர்வதேச அமைப்புகளின் கூட்டங்களிலும், அரசாங்கங்களின் கூட்டங்களிலும் கலந்துக்கொள்ளும் உரிமையையும் அதிகாரத்தையும் கொண்டிருப்பார்.

II. சர்வதேச அமைப்பாளர் சர்வதேச விவகாரங்கள் பற்றி கட்சியின் சார்பில் பேசவும், அறிக்கைகளை விடவும் அதிகாரங்களையும் கடமைகளையும் உரிமைகளையும் கொண்டிருப்பார்.

III. சர்வதேச அமைப்பாளரின் அதிகாரங்களையும் கடமைகளையும் உரிமைகளையும் மத்தியக்குழு தீர்மானிக்கும்.

உ) பொருளாளர், மத்தியக் குழுவின் வழிகாட்டலின் கீழ் கட்சி நிதியை முகாமைப்படுத்துபராவார்.

ஊ) ஒவ்வொரு மாகாண/மாவட்ட பிரதேசத்தையும் பிரதிநிதித்துவப்படுத்த மத்தியக்குழு தெரிவு செய்த துணைப்பொருளாளர்கள் இருக்கலாம். கட்சி நிதியை முகாமைப்படுத்துவதில் துணைப்பொருளாளர்கள் பொருளாளருக்கு உதவியாக இருப்பர்.

## 19. அரசியற் குழுவும் செயலாளர் குழுமமும்

அரசியற் குழுவினதும் செயலாளர் குழுமத்தினதும் உறுப்பினர்களை மத்தியக்குழு தெரிவு செய்யும்.

அ) அரசியற் குழு

I. அரசியற் குழுவானது மத்தியக்குழு கூட்டங்கள் இரண்டிற்கிடையே கட்சியின் பிரதான அதிகாரத்துவமுடைய குழுமமாகும்.

II. பொதுச் செயலாளரும், தேசிய அமைப்பாளரும், சர்வதேச அமைப்பாளரும், பொருளாளரும் அரசியற் குழவின் நிறைவேற்று அதிகாரமுடைய உறுப்பினர்களாவர். அரசியற் குழுவின் பிற உறுப்பினர்கள் மத்தியக் குழுவால் தன் உறுப்பினர்கள் மத்தியிலிருந்து தெரிவு செய்யப்படுவர். ஷ

III. பிற உறுப்பினர்களின் எண்ணிக்கையை

மத்தியக்குழு தீர்மானிக்கும்.

IV. அரசியற் குழு குறைந்த பட்சம் இரு வாரங்கட்கு ஒருமுறை கூட்டப்படவேண்டும்.

ஆ) செயலாளர் குழுமம்

I. கட்சியின் செயலாளர் குழுமம் கட்சியின் அன்றாட அலுவல்கட்குப் பொறுப்பானது.

II. பொதுச் செயலாளரும், தேசிய அமைப்பாளரும், சர்வதேச அமைப்பாளரும், பொருளாளரும் செயலாளர் குழுமத்தின் நிறைவேற்று அதிகாரமுடைய உறுப்பினர்கள் ஆவர். செயலாளர் குழுமத்தின் பிற உறுப்பினர்கள் மத்தியக் குழவால் தன் உறுப்பினர்கள் மத்தியிலிருந்து தெரிவு செய்யப்படுவர்

III. பிற உறுப்பினர்களின் எண்ணிக்கையை மத்தியக்குழு தீர்மானிக்கும்

IV. செயலாளர் குழுமம் ஒவ்வொரு வாரமும் கூடும்.

இ) மத்தியக் கட்டுப்பாட்டு ஆணைக்குழு

I. கட்சி உறுப்பினர் எவரதும் அல்லது கட்சி நிறுவனம் எதனதும் நேரடியான மேன்முறையீட்டின் வகையில் அல்லது மத்தியக் குழுவாலோ, கட்சி மாநாட்டாலோ தனக்கு ஒப்புவிக்கப்பட்ட அல்லது தனது சொந்தக் கவனிப்பின் பேரில் தன் கவனத்துக்கு வந்த ஒழுக்காற்று நடவடிக்கை சார்ந்த விடயங்களைக் கட்சியின் மத்தியக் கட்டுப்பாட்டு ஆணைக்குழு கையாளும்.

II. மத்தியக் கட்டுப்பாட்டு ஆணைக்குழு ஐந்து உறுப்பினர்களைக் கொண்டிருக்கும். கட்சியின் ஓய்வுபெற்ற உறுப்பினர்களில் மூவரும் மத்தியக் குழவில் பதவிவகிப்போர் அல்லாத உறுப்பினர்களில் இருவரும் கட்சி மாநாட்டால் மத்திய கட்டுப்பாட்டு ஆணைக் குழுவுக்குத் தெரிவு செய்யப்படவோ, நியமிக்கப்படவோ தகுதியுடையோராவர்.

III. மத்தியக் கட்டுப்பாட்டு ஆணைக்குழு தனது தலைவரைத் தன் உறுப்பினர்களிலிருந்து தெரிவு செய்யும்.

IV. மத்திய கட்டுப்பாட்டு ஆணைக்குழு முற்கூறிய மேன் முறையீடுகளையும் அவற்றிற் குறிப்பிடப்பட்ட

விடயங்களையும் விசாரித்து ஒவ்வொரு வழக்கையும் அதன் தகைமையின் அடிப்படையில் கவனித்துத் தனது பரிந்துரைகளை மத்தியக் குழுவுக்குச் சமர்ப்பிக்கும்.

V. மத்தியக் கட்டுப்பாட்டு ஆணைக்குழுவின் பரிந்துரைகளை ஏற்கவோ, நிராகரிக்கவோ மத்தியக் குழுவுக்கு அதிகாரம் உண்டு.

ஈ) மத்திய விசாரணைக் குழு

I. மத்திய விசாரணைக் குழு கட்சி உறுப்பினர் எவராலுமோ, கட்சி நிறுவனம் எதனாலுமோ, மத்தியக் கட்டுப்பாட்டு ஆணைக்குழுவாலோ, மத்தியக் குழுவாலோ தனக்கு ஒப்புவிக்கப்பட்ட விடயங்களை விசாரித்தறிந்து மத்தியக் கட்டுப்பாட்டு ஆணைக்குழுவுக்கோ மத்தியக் குழுவுக்கோ அறிக்கைப்படுத்தும்.

II. மத்தியக் கட்டுப்பாட்டு ஆணைக் குழுவினதோ மத்தியக் குழுவினதோ வழிகாட்டலின் அடிப்படையில் கட்சியின் எந்த உறுப்பினரையோ, நிறுவனத்தையோ பற்றிக் குற்ற விசாரணைக்கான நடவடிக்கை எடுக்கும்.

III. கட்சியின் ஓய்வுபெற்ற உறுப்பினர்களில் மூவரும் மத்தியக் குழுவில் பதவி வகிப்போர் அல்லாத உறுப்பினர்களில் இருவரும் கட்சி மாநாட்டால் மத்திய விசாரணைக் குழுவுக்கு தெரிவு செய்யப்படவோ, நியமிக்கப்படவோ தகுதியுடையோராவர்.

## 20. மாவட்டக் குழுக்களும் மாகாணஃபிரதேசக் குழுக்களும்

அ) மத்தியக் குழு மாவட்ட/மாகாண்/பிரதேசக் குழுக்களை நிறுவி அவற்றின் பிரதேச எல்லைகளை வரையறுக்கும்.

ஆ) ஒரு பிரதேசம/மாகாணம் அல்லது மாவட்டத்தில் பொருத்தமானவாறு மாகாண/பிரதேச அல்லது மாவட்டக் குழுவே கட்சியின் அதியுர்ந்த அங்கமாகும்.

இ) மாகாண/பிரதேச, மாவட்டக் கலந்தாய்வுகள் முறையே அவ்வக் குழுக்களால் கட்சியின் அகில இலங்கை மாநாட்டுக்கு முன்பதாக நடத்தப்படும்.

ஈ) கூறப்பட்ட குழுக்களின் நிறுவனக் கட்டமைப்பும், உரிமைகளும், செய்கடமைகளும், உரிய மாகாணம். பிரதேசம் அல்லது மாவட்டத்திற்கு உட்பட்டிருக்கும்.

அவை எடுக்கும் முடிவுகள் அடுத்த உயரி
நிறுவனம் எடுத்த எடுத்த முடிவுகளிற் தொக்கி நிற

உ) ஒவ்வொரு மாகாண/பிரதேச, மாவட்டக் குழு
முழுமைக்குமான மூலோபாய, தந்திரோபாய
நியதிகளின் சட்டக வரைக்குட்பட்டுத் தனது மு
தந்திரோபாயக் கொள்பணிகளை முடிவு செய்யு

ஊ) மாகாண/பிரதேச, மாவட்ட கலந்தாலாய்
நடத்தப் பொருத்தமான நிலைமைகள் இல்லா
மத்தியக்குழு மாகாண/பிரதேச, மாவட்ட ஒழுங்
குழுவொன்றை நியமிக்கலாம். ஏவ்வா
அவ்வொழுங்கமைப்புக் குழு நியமிக்கப்ப
வருடத்திற்குள் மாகாண/பிரதேச, மாவட்டக் க
நடத்தப்பட வேண்டும்.

எ) மத்தியக்குழு மாகாண/பிரதேச, மாவட்டக் கு
உறுப்பினர்களைப் பேராளர்களின் கூட்ட
தெரிவு செய்து பேராளர்களின் தெரிவிற்கான
வகுக்கலாம் என்ற ஏற்பாட்டுக்குட்பட்டு, மாகா
மாவட்டக் குழு உறுப்பினர்கள் நிறுவனத்தின்
பரப்பிற்குட்பட்ட பொது உறுப்பினர் தெ
மாகாண/பிரதேச, மாவட்டக் கலந்தாய்விற்
செய்யப்படலாம்.

ஏ) மாவட்டக் குழுவொன்றின் எல்லைப்
மாகாண/பிரதேசக்குழு முடிவு செய்யும்

ஐ) மாகாண/பிரதேச, மாவட்டக் குழுக்க
செயலாளர்களையும் பொருளாளர்களையும்
செய்யும்.

ஒ) பாரிய ஒழுக்காற்று மீறல், தவறான நடத்
விரோதச் செயற்பாடுகள் ஆகியவ
மாகாண/பிரதேச, மாவட்டக் குழுக்கள் தமது
எவருக்கும் எதிரான உரிய ஒழுக்காற்று ந
எடுக்கலாம். எனினும் அத்தகைய ஒ
நடவடிக்கைக்கு உட்பட்ட உறுப்பினர்கட்கு க
வரையிலான உரிய கருக்குக்க

மாவட்டக் குழுக்கள், உறுப்பினர்களைத் தெரிவு முறையில் உட்சேர்க்கலாம். அவ்வாறு தெரிவு முறையில் உட்சேர்க்கப்பட்ட உறுப்பினர்களின் தொகை சம்பந்தப்பட்ட குழுவிற்கு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர் தொகையின் மூன்றிலொரு பங்கை மீறலாகாது என்பதுடன் உயரிய குழுவினரால் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

ஔ) அடிப்படை அலகான கட்சிக் கிளைக்கும் மாவட்டக் குழுவிறகும் இடையே அமைக்கப்படவுள்ள பல்வேறு கட்சி உறுப்புக்களை மாகாண/பிரதேச மாவட்டக் குழுக்கள் முடிவு செய்வதுடன் அவற்றின் கட்டமைவையும் செயற்படுதலையும் பற்றி தேவையான ஏற்பாடுகளையும் செய்யும்.

க) மாகாண/பிரதேச மாவட்டக் குழுக்கள் அடுத்த உயரிய குழுவுக்கு ஒழுங்கான, காலகட்ட அறிக்கைகளை எழுத்தில் சமர்ப்பிக்கும்.

கா) மாகாண/பிரதேச மாவட்டக் குழுக்கள் எங்கு, எப்போது தேவையோ அதற்கமைய நீடித்த கூட்டங்களை நடத்தலாம்.

கி) மாகாண/பிரதேசங்களில் கட்சியின் தேவைகளை நிறைவு செய்யுமுகமாக மாகாண/பிரதேச குழுக்கள், மாகாண/பிரதேசக் கொள்கை பரப்புச் சாதனங்களை வெளியிடலாம். இவ்வாறான சாதனங்கள் மத்திய குழுவில் அரசியல், நிறுவன மார்க்கங்கட்கு உடன்பட்டவையாக அமைய வேண்டும்.

கீ) மாகாண/பிரதேசக் குழுக்கள் தேவையானவாறு, தேவையானபோது விசாரணைக் குழுக்களை நியமிக்கலாம்.

கு) கட்சியின் அடிமட்ட அலகு பிரதேசங்களினது அடிப்படையில் அமைக்கப்பட்ட கட்சிக் கிளையாகும்.

கூ) ஒரு கிளையில் இருக்கக்கூடிய ஆகக்குறைந்த உறுப்பினர் எண்ணிக்கை மூன்றாகும். கட்சிக் கிளை தனது செயலாளரையும் பொருளாளரையும் தெரிவு செய்யும்.

கெ) கட்சிக் கிளையானது அதற்கு நேரே உயரிய குழுவின் கீழ் இயங்கும். அது தனது செயற்பாட்டுப் பரப்பிற்கோ,

துறைக்கோ உட்பட்டு இயங்கும், கட்சிக்கும் பரந்துபட்ட மக்கள் திரளிற்குமிடையிலான நேரடி இணைப்பாகும்.

கே) கட்சிக் கலன் அல்லது கிளையொன்றின் கொள்பணிகள் பின்வருமாறு:

I. உயரிய குழுவின் முடிவுகளையும் பணிப்புக்களையும் நிறைவேற்றல்.

II. மக்களின் வெகுஜனப் போராட்டங்களைத் தொடங்கித் தலைமை தாங்கல்.

III. தொழிற்சாலை, பெருந்தோட்டம், கிராமம், வட்டாரம் அல்லது பகுதியில் கட்சியின் அரசியல் மார்க்கத்திற்கு மக்களை வென்றெடுத்தல்.

IV. புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதும் அவர்கட்கு அரசியல் அடிப்படையிற் கல்வி புகட்டுவதும்.

கை) கட்சிக் கிளை தன் அதிகார எல்லைக்குட்பட்டு முடிவுகளை எடுக்கும் உரிமையுடையது.

## 21. உட்கட்சி கலந்துரையாடல்

அ) கட்சியை ஐக்கியப்படுத்த, கட்சிக் கொள்கை பற்றிக் கட்சியின் பல்வேறு நிறுவனங்களிலும் சுதந்திரமானதும் செயலொழுங்கானதுமான கலந்துரையாடல்கள் ஒட்டுமொத்தமாகப் பயனுள்ளவையும் அவசியமானவையுமாகும். அது உட்கட்சி ஜனநாயகத்திலிருந்து எழும் கட்சி உறுப்பினர்களது பாராதீனப்படுத்த இயலாத உரிமையாகும். எனினும் கட்சிக் கொள்கை பற்றிய முடிவுறாத கலந்துரையாடல்கள் கட்சியின் ஒற்றுமையையும் போராட்ட உணர்வையும் முடக்குவதோடு, உட்கட்சி ஜனநாயகத்தின் முழு மொத்தமான துஸ்பிரயோகமுமாகும். மாறுபட்ட கருத்துக்களையுடைய தனிமனிதர்களை இணக்கிச் செல்வதற்குகந்த சுற்றுச் சூழல் கட்சிக்குள் கட்டப்படவேண்டும்.

ஆ) பின்வரும் சூழ்நிலைகளில் உட்கட்சிக் கலந்துரையாடல்கள் நாடளாவிய அளவில் மத்தியக் குழுவினால் ஒழுங்கமைக்கப்படும்.

I. அது தேவையென மத்தியக்குழு கருதும்போது

II. கட்சிக் கொள்கைத் தொடர்பான முக்கியமான

ஒரு பிரச்சினையில் மத்தியக் குழுவிற்குள் உறுதியான ஒரு பெரும்பான்மை இல்லாதபோது

III. குழுவொன்றின உறுப்பினர் ஒருவர், நாடாளாவிய கொள்கை ஒன்றை பாதிக்கக்கூடிய பொது நியதி பற்றிய பிரச்சினையில் குழவின் பெரும்பான்மையினருடன் முரண்படுவாராயின் சம்பந்தப்பட்ட உறுப்பினர், தனது கருத்துக்களை தான் உறுப்பினராக உள்ள குழு மூலம் மத்தியக் குழுவுக்குத் தெரியப்படுத்த வேண்டும். குறிப்பிட்ட பிரச்சினைத் தொடர்பான உட்கட்சி விவாதம் தேவையா எனவும் தேவையாயின் எப்பபோது என்றும் மத்தியக்குழு முடிவு செய்யும்.

IV. மத்தியக்குழுவின் உறுப்பினர் ஒருவர் அதன் பெரும்பான்மையினருடன் கொள்கைத் தொடர்பான பிரச்சினைப் பற்றி கருத்து வேறுபட்டு தனது கருத்துக்களை மாகாண/பிரதேச குழுக்களுக்கு சுற்றறிக்கைப் படுத்த வேண்டுமெனக் கோருமிடத்து, மத்தியக்குழுவின் பெரும்பாலோனோர் அக் கோரிக்கைக்குச் சாதகமாக உள்ளபோது மத்தியக்குழு அவ்வாறு செய்யலாம்.

V. முக்கியமான எப்பிரச்சினையிலும் உயரிய குழுவினர் முடிவுகட்கும் தீர்மானங்கட்கும் முரணாக அமையும் கருத்துக்களை கட்சிக் குழுவொன்று கொண்டிருந்து தனது கருத்துக்கள் தனக்குயரிய குழுவின் கீழுள்ள தனக்கு சமமான தகுதியுடைய அனைத்துக் குழுக்களுக்கும் சுற்றறிக்கைப்படுத்த வேண்டுனெக் கோருமாயின் அவ்வாறு செய்யப்படவேண்டும். ஆயினும் அதற்கு முன்னர் அப்பிரச்சினையைத் தீர்க்கும் முகமாக நிறை பேரவை அல்லது அத்தகைய உயரிய கருத்துக்களம் கூட்டப்பட்ட குழுவின் பெரும்பான்மையினரின் கருத்துக்களுடன் உயரிய குழுவின் கருத்துக்களும் சுற்றறிக்கைப் படுத்தப்படவேண்டும்.

VI. மாகாண/பிரதேசக் குழுக்களிற் பெரும்பான்மையானவற்றால் அல்லது கட்சியின் உறுப்பினர் தொகையிற் பெரும்பான்மையானோரைப்

பிரதிநிதித்துவப்படுத்தும் மாவட்டக் குழுக்களினால் நாடளாவிய அளவில் ஒரு உட்கட்சி கலந்துரையாடல் கோரப்படுமாயின் அக்கலந்துரையாடல் நடாத்தப்படல் வெண்டும்.

இ) குழுவொன்றின் உறுப்பினர் ஒருவர் மத்தியக் குழுவின் கொள்கை எதனுடனும் உடன்படாதவிடத்து அவர் தனது கருத்துக்களை மத்தியக் குழுவிற்கு எழுத்திற் சமர்ப்பிக்கலாம். அவசியமென கருதுமிடத்து மத்தியக்குழு சம்பந்தப்பட்ட உறுப்பினரின் கருத்துக்களை, அவை சமர்ப்பிக்கப்பட்டு ஆறு மாதங்களுக்குள் தனது அவதானங்களுடன் சேர்த்து சுற்றறிக்கைப் படுத்தலாம்.

ஈ) இவற்றை ஒத்த உட்கட்சிக் கலந்துரையாடல்கள் பிரதேச மாகாண/மாவட்டங்களில் மத்தியக் குழுவின் வழிகாட்டலின் கீழ் ஒழுங்கு செய்யப்படலாம்.

உ) கட்சிக்குள் முக்கியமான பிரச்சினைகளைப் பற்றிக் கலந்துரையாடவும் விவாதிக்கவும் உறுப்பினர்கட்கு கல்வியு'ட்டி, அவர்களது விளக்கத்தையும், அனுபவங்களையும் செழுமைப்படுத்தவும் உட்கட்சி மடலொன்றை மத்தியக்குழு வெளியிட வேண்டும்.

ஊ) கட்சி ஸ்தாபனத்திற்குள் உறுப்பினர்கள் முக்கிமான கருத்தியல் அரசியல் பிரச்சினைகளில் கட்சி உறுப்பினர்கள் தமது அவதானிப்புக்களையும் கருத்துக்களையும் தெரிவிக்க இயலும். எ) கட்சி மாநாட்டிற்கும் நிறைபேரவைக் கூட்டங்களுக்கும் முன்பதாக கீழ்மட்டக் குழுக்களிடமிருந்து அனைத்து மட்டங்களிலுமான உட்கட்சிக் கலந்துரையாடலுக்குரிய ஆவணங்கள் மத்தியக் குழுவுக்கு அனுப்பப்படல் வேண்டும். மத்தியக்குழு மாநாட்டிற்கோ, நிறைபேரவைக்கோ தனது ஆவணங்களைத் தயாரிக்கும்போது அவற்றை கணிப்பில் எடுக்கும்.

## 22. நிதி

அ) மத்தியக்குழு கட்சி நிதிக்கும் சொத்துக்களுக்கும் பொறுப்பானது. மத்தியக்குழு வருடாந்த வரவு செலவு திட்டத்தை வரைந்து அதற்கான நிதியை ஒதுக்கும்.

துணைப் பொருளாளர்களின் உதவியுடன் பொருளாளர் கட்சியின் நிதியை முகாமைப்படுத்தப் பொறுப்புடையவராய் இருப்பார். அரசியற் குழு சமர்ப்பிக்கும் வருடாந்த கணக்காய்வு அறிக்கையை மத்தியக்குழு ஏற்கும். கணக்காய்வு அறிக்கை அங்கீகரிக்கப்பட்ட கணக்காய்வாளர் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

ஆ) கட்சி நிதி முகாமைத்துவத்தில் மாகாண/பிரதேச மாவட்டக் குழுக்களும் கட்சிக் கிளைக் குழுக்களும் மத்தியக் குழுவின் நடத்தையைப் பின்பற்றவேண்டும். பிரதேச, மாகாண, மாவட்டக் குழுக்களினதும் கட்சிக் கிளைக் குழுக்களினதும் வங்கிக் கணக்குகள் சம்பந்தப்பட்ட குழுவின் செயலாளராலும் பொருளாளராலும் மத்தியகுழுவின் வழிகாட்டலின்கீழ் இயக்கப்படல் வேண்டும்.

இ) கட்சியின் நிதிகள் வங்கிக் கணக்குகள் மூலம் நிர்வகிக்கப்படும். பொருளாளரும், பொதுச் செயலாளரும் அல்லது தேசிய அமைப்பாளரும் கட்சியின் வங்கிக் கணக்குகளை இயக்குவர். கட்சிக் கணக்கை வைத்திருக்கும் வங்கியும் கணக்கின் வகையும் மத்தியக் குழுவால் தீர்மானிக்கப்படும்.

ஈ) கட்சி நிதிகள் உறுப்பினர்களது சந்தா (உறுப்புரிமைக் கட்டணம்), வழமையான நன்கொடைகள் என்பனவற்றையும் நலம் நாடுவோரினதும், நிறுவனங்களினதும் நன்கொடைகளையும் நிதித்திரட்டு நிகழ்ச்சிகளிலும் கட்சி நலனுக்கான நிகழ்ச்சிகளிலும் பொதுமக்களின் பங்களிப்புகளையும் உள்ளடக்கும்.

உ) சந்தா தொகைகளையும் உறுப்பினர்களுக்கு விதிக்கப்பட்ட நன்கொடைகளையும் காலத்துக்குக் காலம் மத்தியக் குழு தீர்மானிக்கும்

ஊ) கட்சியின் சொத்துக்கள் பொருளாளர், பொதுச் செயலாளர், தேசிய அமைப்பாளர் ஆகியோரால் பேணப்பட்டு, முகாமைச் செய்யப்பட்டு செயல்முறைப்படுத்தப்படும்.

**23. நிறைவெண்ணிக்கை**

அனைத்துக் கட்சி நிறுவனங்களதும் அலுவல்களை நடத்தவும் அவற்றைச் செல்லுபடியாக்கவும் உறுப்பினர் தொகையில் 50 சதவீதமானோருக்குக் குறைவில்லாதோர் சமுகமளிக்க வேண்டும்.

**24. முடிவுகள்**

ஒருமனதான முடிவுகளை எட்டுவது இயலாது போகுமிடத்து கட்சியின் அகில இலங்கை மாநாடு, நிறை பேரவை, மத்தியக்குழு, அரசியல் குழு, செயலாளர் குழு ஆகியனவும் மாகாண/பிரதேச மாவட்டக் கிளைகள் போன்ற கட்சியின் பிற நிறுவனங்களும் நிறைவெண்ணிக்கையின் மூன்றில் இரண்டு பங்கினரைக் கொண்ட பெரும்பான்மையுடன் முடிவுகளை எடுக்கலாம்.

**25. வெகுஜன நிறுவனங்கள்**

வெகுஜன நிறுவனங்களில் உள்ள கட்சி உறுப்பினர்கள் தேவையான இடத்து கூறுகளாக ஒழுங்கமைக்கப்படுவர். அவர்கள் கட்சியின் பொருத்தமான குழுவின் கீழ் ஒழுங்கமைவான முறையில் செயற்படலாம்.

**மேலுள்ள யாப்பும் அதிலுள்ளடங்கியுள்ள அமைப்பு விதிகளும் 2012 யூன் 25,26ம் திகதிகளில் கொழும்பில் நடைபெற்ற புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியின் 5வது அனைத்திலங்கை மாநாட்டினால் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டனவாகும்**

# கம்யூனிஸ்ட்டுக்கள்

கம்யூனிஸ்ட் ஒருவர் விசால உள்ளம் படைத்தவராக இருக்க வேண்டும். அவர் நேர்மையும் ஊக்கமும் உடையவராக இருத்தல் வேண்டும். கட்சியின் நலன்களைத் தனது சொந்த உயிர் போல் கருத வேண்டும். தனது நலன்களை கட்சியின் நலன்களுக்குக் கீழ்ப்படுத்த வேண்டும். எங்கும் எப்போதும் அவர் சரியான கோட்பாட்டின் படி ஒழுகி, தவறான கருத்துக்கள், செயல்கள் எல்லாவற்றுக்கும் எதிராக சளையாத போராட்டம் நடத்த வேண்டும். இவ்வாறு கட்சிக்கும், மக்களுக்கும் இடையிலுள்ள தொடர்புகளைப் பலப்படுத்த வேண்டும். அவர் எந்த ஒரு தனி நபரிலும் பார்க்க கட்சியிலும், மக்களிலும் கூடுதலான அக்கறை செலுத்த வேண்டும். இப்படிச் செய்தால் தான் அவரை ஒரு கம்யூனிஸ்ட் என்று கருத முடியும்.

புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சி

புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியின் 5வது அனைத்திலங்கை மாநாட்டினால் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டு வெளியிடப்பட்டது